[31st October 1958

Handloom cess fund

* 745 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

1957–58-க்கு கைத்தறி செஸ் நிதியின் மூலம் சர்க்காருக்கு கிடைத்த பணம் எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : Rs. 125·82 lakhs, of which grants amounted to Rs. 92·09 lakhs and loans amounted to Rs. 33·73 lakhs.

SRI V. K. KOTHANDARAMAN : 1957–58-ஆவது ஆண்டிலே கிடைத்த செஸ் நிதி அவ்வளவையும் கைத்தறிக்காரர்களுக்கு உபயோகப்படுத்தாதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : தனிக் கேள்வி வேண்டும்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : செஸ் நிதி யானது சொஸைடிகளுக்கு காலாகாலத்தில் கிடைக்காததன் காரணமாக, அது காலாகாலத்தில் கிடைத்தால் நெசவாளர்களுக்கு சௌகரியமாக இருக்கும் என்பதை முன்னிட்டு, அதை உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : I will look into it.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : செஸ் நிதி கிடைப்பதற்கு காலதாமதம் ஆவதால், கூட்டுறவு சங்கங்களை நடத்துவதற்கு முடியாத நிலைமையில் இருக்கின்றன. எனவே, சர்க்கார் செஸ் நிதி கிடைப்பதற்கு முன்பாக கடன் கொடுத்து, அது வந்ததும் கடன் பணத்தை திருப்பி எடுத்துக்கொள்ளும் வகையில் ஏதாவது உதவி செய்ய முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : தனிக் கேள்வி வேண்டும்.

SRI K. ANBAZHAGAN : திருநெல்வேலி, ராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள கூட்டுறவு நிலையங்களுக்கு 7, 8 லட்சம் ரூபாய் அளவுக்கு தள்ளுபடித் தொகை ஓராண்டு காலத்திற்கு கிடைக்காமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அவர்களுடைய விண்ணப்பங்கள் கவனிக்கப்பட்டதா ?

MR. SPEAKER : This does not arise from the main question. The hon. Member must put a separate question.

SRI A. MARIAPPAN : 1958–59-ல் ஒதுக்கிய தொகையில் 1958 ஏப்ரல் மாதம் வரையில் தான் ரிபேட் தொகை கொடுக்கப்பட்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? மேற்கொண்டு நடப்பு மாதங்களுக்கு உடனடியாக பணம் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : தனிக் கேள்வி வேண்டும்.

Art Silk

* 746 *Q.*—SRI S. LAZAR : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) நம் ராஜ்யத்தில் ஒரு வருடத்திற்கு நெசவாளர்களுக்குத் தேவையான நார் பட்டு எவ்வளவு ?

(ஆ) நம் ராஜ்யத்தில் உற்பத்தியாகும் நார் பட்டு எவ்வளவு ?